பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

14 09 2026 MONDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. புதுதில்லியில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சிமாநாட்டைப் பயனுள்ளதாகவும், பலன் தரும் வகையிலும் மாற்றியமைத்த உறுப்பு நாடுகளின் தலைவர்கள் அனைவருக்கும் பிரதமர் திரு.நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.
2. பிஜேபி ஆளும் 21 மாநிலங்களில் 2029-ம் ஆண்டுக்குள் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா கூறியுள்ளார்.
3. விநாயகர் சதுர்த்தி விழா நாடு முழுவதும் இன்று பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.
4. ஹோர்முஸ் நீரிணை பிரச்சனை குறித்து விவாதிக்க ஈரான் மற்றும் வளைகுடா நாடுகளுக்கு இடையே இன்று நடைபெறவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
5. ஆசியக் கோப்பை மகளிர் டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 72 ரன் வித்தியாசத்தில் இலங்கையை வென்று கோப்பையை கைப்பற்றியது.

--- இனி விரிவான செய்திகள் ---

----------

புதுதில்லியில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சிமாநாட்டைப் பயனுள்ளதாகவும், பலன் தரும் வகையிலும் மாற்றியமைத்த உறுப்பு நாடுகளின் தலைவர்கள் அனைவருக்கும் பிரதமர் திரு.நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

இரு நாட்கள் நடைபெற்ற உச்சிமாநாட்டின் முக்கிய தருங்களைக் கொண்ட காணொளி ஒன்று பிரதமரின் சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அந்தக் காணொளியில், பிரிக்ஸ் அமைப்பு மூலம் இந்தியா நட்பு, கூட்டு செயல்பாடு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தியுள்ளது என்று பிரதமர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இடம்பெற்றுள்ளது..

இந்த உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்களில் ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின், சீன அதிபர் திரு.ஜி ஜின்பிங், ஈரான் அதிபர் திரு. மசூத் பெசெஷ்கியன் மற்றும் அபுதாபி இளவரசர் திரு. முகமது பின் சயீத் அல் நஹ்யான் ஆகியோர் முக்கியமானவர்கள் ஆவர்.

இவர்களுடன் பிரதமர் இருதரப்பு உறவுகள் குறித்தும் பேச்சுக்கள் நடத்தினார்.

----------

பிஜேபி ஆளும் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசுகள் 2029-ஆம் ஆண்டுக்குள் பொது சிவில் சட்டத்தை அறிமுகப்படுத்தும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மும்பையில் நேற்று செய்தியாளர் களிடம் பேசிய அவர் , பொது சிவில் சட்டம் ஏற்கனவே பல மாநிலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், 2029-ஆம் ஆண்டுக்குள் 21 மாநிலங்களிலும் இது அறிமுகப்படுத்தப்படும் என்று தமக்கு முழு நம்பிக்கை உள்ளதாகவும் கூறினார்.

முத்தலாக் முறை ஒழிக்கப்பட்டுள்ளதன் மூலம் முஸ்லிம் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட்டுள்ளதாக திரு அமித் ஷா தெரிவித்தார்.

புதிய குற்றவியல் சட்டம் மூலம் நாட்டின் குற்றவியல் நீதித்துறையை அரசாங்கம் வலுப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், ஒரே ஆண்டில் பல மாநிலங்களில் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும் விகிதம் 30 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், மூன்று ஆண்டுகளுக்குள் நீதி வழங்குவதை உறுதி செய்வதற்கான ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு வருவதாகவும் உள்துறை அமைச்சர் கூறினார்.

தேசிய பாதுகாப்பு குறித்துப் பேசிய திரு அமித் ஷா, அரசியலமைப்புச் சட்டம் 370 மற்றும் 35A பிரிவுகள் ரத்து செய்யப்பட்டது ஒரு துளி ரத்தம் கூட சிந்தப்படாமலோ அல்லது ஒரு குண்டு கூட வெடிக்கப்படாமலோ வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

----------

நாடு முழுவதும் இன்று இந்தி தினம் கொண்டாடப்படுகிறது.

நாட்டின் அலுவல் மொழியாக தேவநாகரி எழுத்துருவில் எழுதப்பட்ட இந்தியை, கடந்த 1949-ஆம் ஆண்டு இதே நாளில்தான் நிர்ணய சபை ஏற்றுக்கொண்டது.

இன்று, உலகளவில் பரவலாகப் பேசப்படும் மொழிகளில் ஒன்றாகவும், 52 கோடிக்கும் அதிகமான மக்களின் தாய்மொழியாகவும் இந்தி திகழ்கிறது.

நவி மும்பையில் இன்று நடைபெறவுள்ள இந்தி தின விழா மற்றும் 6-வது அகில இந்தி அதிகாரபூர்வ மொழி மாநாட்டில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கலந்துகொள்ள உள்ளார்.

இந்த இரு நாள் மாநாட்டில் அறிஞர்கள், இலக்கியவாதிகள், கல்வியாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மூத்த அரசு அதிகாரிகள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டு, இந்தியை அலுவல் மொழியாகவும், மக்களின் மொழியாகவும், இணைப்பு மொழியாகவும் வளர்ப்பது

குறித்தும், பிற இந்திய மொழிகளுடன் அதனை ஒருங்கிணைப்பது குறித்தும் விவாதிக்க உள்ளனர்.

இந்த விழாவில் அலுவல் மொழித் துறையில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய நிறுவனங்கள் மற்றும் நபர்களைக் கௌரவிக்கும் வகையில் விருதுகள் வழங்கப்பட உள்ளன.

----------

விநாயகர் சதுர்த்தி இன்று வழக்கமான உற்சாகத்துடனும் பக்தி சிரத்தையுடனும் கொண்டாடப்படுகிறது.

இந்நாளை முன்னிட்டு, நாட்டு மக்களுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார்.

விநாயகர் ஞானம், வளம் மற்றும் மங்களகரமான தொடக்கங்களின் அடையாளமாகத் திகழ்கிறார் என்றும் விநாயகர் சதுர்த்தித் திருவிழா நமது வாழ்வில் ஆற்றலையும், அறிவையும், நேர்மறைச் சிந்தனையையும் கொண்டுவரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லாவும் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு மக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா, கர்நாடகா மாநிலங்களின் விநாயகர் சதுர்த்தி வெகுவிமரிசையாக கொண்டாடப்படுகிறது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் 10 நாட்கள் நடைபெறும் விநாயகர் சதுர்த்தி விழா இன்று காலை தொடங்கியது.

1893-ம் ஆண்டு முதல் புனே நகரில் நடைபெற்று வரும் விநாயகர் சதுர்த்தி விழாவுக்காக இந்த ஆண்டும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மறைந்த விடுதலை போராட்ட தலைவர் பாலகங்காதர திலக் தொடங்கிய இந்த விழா சமூக ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

இந்த விழாவையொட்டி, மகாராஷ்டிரா மாநில அரசின் சார்பில், சிறப்பு கண்காட்சியும் நடத்தப்படுகிறது.

கர்நாடகா மாநிலத்திலும் ஒருவார கால விநாயகர் சதுர்த்தி விழா கோலாகலமாக தொடங்கியுள்ளது.

----------

அசாமின் Nagaon மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலில் திரிணாமுல் காங்கிரஸ் தனித்து போட்டியிடுகிறது.

அந்த தொகுதியில் திரு. அப்துல் சலாம் போட்டியிடுவார் என்று அக்கட்சியின் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார்.

அடுத்தமாதம் 6 ஆம் தேதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான வேட்பாளரை காங்கிரஸ் கட்சி இன்னும் அறிவிக்கவில்லை.

----------

மணிப்பூரில் 1951-ஆம் ஆண்டை அடிப்டை ஆண்டாகக் கொண்டு தேசிய குடிமக்கள் பதிவேட்டை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சமீபத்தில் நிறைவடைந்த சட்டப்பேரவை கூட்டத்தொடரில் வலியுறுத்தப்பட்டதாக மணிப்பூர் அரசு செய்தித்தொடர்பாளரும் சட்டமன்ற உறுப்பினருமான திரு தொக்சோம் ராதேஷியாம் தெரிவித்துள்ளார்.

இந்தக்கோரிக்கையை வலியுறுத்துவதற்காக அமைச்சர் திரு.கோவிந்தாஸ் கொந்துஜாம் தலைமையிலான குழுவினர் தற்போது புதுதில்லியில் முகாமிட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மாநிலத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகளையும் தற்காலிகமாக நிறுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதனால் அரசு அலுவலகத்தின் செயல்பாடுகளை தடை செய்யும் நடவடிக்கையை எல்லை நிர்ணயக் குழு' கைவிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

----------

ஹோர்முஸ் நீரிணை வழியாக கப்பல் போக்குவரத்தை ஏற்பாடு செய்வது குறித்து விவாதிக்க ஈரான் மற்றும் வளைகுடா நாடுகளுக்கு இடையே இன்று நடைபெறவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை ஓமன் வெளியுறவுத்துறை அமைச்சர் பத்ர் பின் ஹமத் அல் புசைதி அறிவித்துள்ளார்.

ஓமனின் தொடர்ச்சியான உரையாடல், பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் நீண்ட கால ஒத்துழைப்புக்கான அர்ப்பணிப்பை வலியுறுத்திய அவர், சலலா நகரில் இன்று நடைபெறவிருந்த பிராந்தியக் கூட்டம் வளைகுடா நாடுகளின் நலனைக் கருதி' ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

சில நாடுகளின் வேண்டுகோளின் பேரில் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாகவும், ஈரானும் ஓமனும் இணைந்து இந்த முடிவை எடுத்ததாகவும் ஈரான் அரசுடன் தொடர்புடைய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஹோர்முஸ் நீரிணை வழியாக புதிய கடல்வழிப் பாதை குறித்து ஓமனுடன் ஒருமித்த கருத்து எட்டப்பட்டுள்ளதாக ஈரான் இதற்கு முன்பு தெரிவித்திருந்தது.

ஹோர்முஸ் நீரிணை மற்றும் செங்கடல் ஆகிய இரண்டு முக்கிய பிராந்திய கப்பல் வழித்தடங்கள் மீதும் அழுத்தம் அதிகரித்து வரும் காலகட்டத்தில், ஈரான்-வளைகுடா நாடுகளின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருப்பது ராஜதந்திரத்திற்கு ஒரு பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில்,சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலைமீண்டும் உயர்ந்துள்ளது.

----------

ஆந்திரப் பிரதேசத்தின் மின்னல் தாக்கியதில் நான்கு பேர் உயிரிழந்த சம்பவத்திற்கு முதலமைச்சர் திரு என். சந்திரபாபு நாயுடு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

பண்டிகை காலத்தின் போது இந்த உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளது மிகவும் துயரமானது என்று முதலமைச்சர் கூறினார்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தனது இரங்கலைத் தெரிவித்துக்கொண்ட அவர், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு சார்பில் தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்படும் என்றும் உறுதியளித்தார்.

----------

ஆசியக் கோப்பை மகளிர் டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 72 ரன் வித்தியாசத்தில் இலங்கையை வென்று கோப்பையை கைப்பற்றியது.

துபாயில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில், முதலில் விளையாடிய இந்தியா 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 183 ரன்

விளையாட்டுச் செய்திகள்--2

எடுத்தது. 184 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இலங்கை 20 ஓவரில் 111 ரன்னுக்கு ஆட்டம் இழந்தது.

>>>>>>END<<<<<<